திண்டிவனம்
செய்தியாளர் சிவ
வெங்கடேசராவ்

# மனசொலி

மக்களின் மனசாட்சி

மாலை நாளிதழ்

7373837799

டிசம்பர்- 16, 2023 சனிக்கிழமை 4 பக்கம் விலை ரூ.3/-

# மயிலத்தில் ஆருத்ரா உலகப் பன்னிருத் திருமுறை மாநாடு அமைச்சர் மஸ்தான் பங்கேற்றார்

♦ **திண்டிவனம்**

மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை, அறிவியல் கல்லூரியில் பன்னிரு திருமுறை மாநாட்டில் அமைச்சர் செஞ்சி மஸ்தான், ஆன்மீக சொற்பொழிவு ஆற்றினார். இதனைத் தொடர்ந்து மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கலை அறிவியல் கல்லூரியில் நடந்த பன்னிருத் திருமுறை மாநாடு மற்றும் நூல் வெளியீட்டு விழாவிற்கு மயிலம் பொம்மபுர ஆதீனம் 20ஆம் பட்டம் சிவஞான பாலய சுவாமிகள் தலைமை தாங்கி ஆசியுரை வழங்கினார்.

கல்லூரி செயலாளர் கேப்டன் ராஜீவ்குமார் ராஜேந்திரன், கல்லூரி முதல்வர் முனைவர்.திருநாவுக்கரசு, இந்திரா காந்தி தேசிய கலை மைய மண்டல இயக்குநர் கலாச்சார அமைச்சகம் இந்திய அரசு புதுச்சேரி மண்டல மையம் முனைவர் கோபால் முன்னிலை வகித்தார்.

பன்னிரு திருமுறை மாநாட்டில் தமிழ்நாடு சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி. மஸ்தான், “இட்டலிங்க யோகா” என்னும் நூலை வெளியீட்டு சிறப்புரையாற்றினார். குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாநாட்டில் பேசினார்.

இதனை தொடர்ந்து பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய (மங்கையர்கரசி விருதுகள்.) முத்தமிழ் முரசு முனைவர் கமலா



முருகன் ராணி மேரி கல்லூரி சென்னை,

(மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பேத்தி) டாக்டர். கவிஞர் உமா பாரதி, சென்னை.

தமிழ்ச்செம்மல் கேப்டன் முனைவர் வேலம்மாள், முதல்வர். அரசு கலைக் கல்லூரி கடைய நல்லூர், திருக்குறள் தூதர் சாதனைப் பெண்மணி மதுரையை சேர்ந்த ஜோதி மீனாஷி,

இறைப்பணி இலக்கியச் செல்வர் விருது முனைவர் சீதா, புனித பிலோமினாள் கல்லூரி மைசூர், அருந்தமிழ் முரசு விருது, எழுச்சி கவி சரவணன், திருக்குறள் உலக சாதனையாளர் அமைப்பு புதுவை, கவிச் சுடர் விருது முனைவர் பிரியா கண்ணன், சென்னை. உள்ளிட்ட 7 பேருக்கு விருதுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப் பட்டனர்.

இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேதுநாதன், மாநாட்டு குழுவினர் சிவத்திரு. பால்வண்ணன், முனைவர் கிங்ஸ்டன்பால் தம்புராஜ், முனைவர் சதீஷ், முனைவர் பாரதி, முனைவர் சுஜாதா, முனைவர் தினேஷ் கார்த்திக், முனைவர் தனராசு, முனைவர் கமலா முருகன், திருமதி. சரண்யா, திருமதி. ஜெயவித்யா, திருமதி. கவிதா, செல்வி சூர்யா சரவணன் உள்ளிட்ட மாநாட்டு குழுவினர் கலந்து கொண்டனர்

இந்நிகழ்ச்சியில் பெங்களூர் எழுத்தாளர் இளவரசன், எழுதிய இட்டலிங்க யோகா என்ற நூல் முதல் பிரதியை திருமடத்தை சேர்ந்த விஸ்வநாதன் பெற்றுக் கொண்டார்.

கம்பன் கழக பொதுச்செயலாளர் ஞானஜோதி சரவணன், நூல் மதிப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் முனைவர் நாகராஜன், உதவி பேராசிரியர்கள் சிவசுப்பிரமணியம், குமார், கல்லூரி பேராசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் உதவி பேராசிரியர் வள்ளி நன்றி கூறினார்.




■ விழுப்புரம் மாவட்டம் மயிலம் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கலை அறிவியல் கல்லூரியில் திருக்கயிலாயப் பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம், இந்திரா காந்தி தேசிய கலை மையம், ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரி மற்றும் கம்பன் கழகம் அறக்கட்டளை இணைந்து மைலத்தில் தமிழ் உலா 2023 ஆருத்ர உலகப் பன்னிரு திருமுறை மாநாடு நடைபெற்றது.

## இந்து சமய அறநிலைத்துறை மூலம் தமிழ்நாட்டில் உள்ள திருக்கோவில்களில்

# முதலமைச்சர் சீரும் சிறப்புமாக அன்னதானம் செய்து கொண்டிருப்பதாக பெருமிதமாக தெரிவித்தார்

விழுப்புரம் டிச.17-

விழுப்புரம் மாவட்டம் மயிலம் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கலை அறிவியல் கல்லூரியில் திருக்கயிலாயப் பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம், இந்திரா காந்தி தேசிய கலை மையம், ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரி மற்றும் கம்பன் கழகம் அறக்கட்டளை இணைந்து நடத்திய தமிழ் உலா 2023 மைலத்தில் ஆருத்ர உலகப் பன்னிரு திருமுறை மாநாடு நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு கல்லூரி செயலாளர் ராஜீவ்குமார் ராஜேந்திரன், கம்பன் கழக அறக்கட்டளை பொதுச் செயலாளர் ஞானஜோதி, இந்திரா காந்தி தேசிய கலை மையத்தின் மண்டல இயக்குனர் கோபால் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற உலக பன்னிருத் திருமுறை மாநாடு நிகழ்ச்சியில் திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி திருப்பெருந்திரு தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிய பரமாச்சாரிய சுவாமிகள், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி.மஸ்தான் ஆகியோர் கலந்துகொண்டு மயிலம் மொம்மபுர ஆதீனம் சார்பில் இயற்றப்பட்ட இட்டலிங்கா யோகா ஆய்வு தொகுதி நூலை வெளியிட்டு மாநாட்டில் கலந்து கொண்ட ஆசிரியர்கள், பேராசிரியர்கள், மற்றும் மாணவ மாணவிகளுக்கு விருதுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி சிறப்புரையாற்றினர்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்: சமுதாயத்தில் எல்லோரிடத்திலும் இணைந்து வாழ வேண்டும் சமூக நல்லிணக்கத்தோடு இருப்பவர்கள் இல்லாதவர்களுக்கு கொடுத்த வாழ வேண்டும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

முன்னதாக திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிய பரமாச்சாரிய சுவாமிகள் பேசுகையில்:

சாதி, சமயம், அடையாளம் தெரியாது பசித்து வருபவருக்கு உணவு அளிப்பது தான் உண்மையான அன்னதானம் அந்த அன்னதானத்தை இன்று தமிழ்நாட்டில் உள்ள அனைத்து திருக்கோயில்களிலும் இந்து சமய அறநிலைத்துறை மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் சீரும் சிறப்புமாக செய்து கொண்டிருப்பதாக அவர் பெருமிதம் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேதுநாதன், மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், கல்லூரி முதல்வர் திருநாவுக்கரசு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.